සියලුම හිමිකම් ඇවිරිණි/ முழுப் பதிப்புரிமையுடையது / All Rights reserved

මධ්‍යම පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மத்திய மாகாண கல்வித் திணைக்களம்
Department of Education Central Province

தரம் : 11 | க.பொ.த (சா/த) முன்னோடிப் பரீட்சை - 2018 | 65 T I

# இரண்டாம் மொழி தமிழ் I

කාලය : පැය තුනයි
நேரம் : மூன்று மணித்தியாலம்
Time : Three Hours

கவனிக்க.
- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே **புள்ளடியை** (x) இடுக.
- அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

සැලකිය යුතුයි:
- සියලුම ප්‍රශ්න වලට පිළිතුරු සපයන්න.
- අංක **1** සිට **40** තෙක් ප්‍රශ්නවල දී ඇති (1), (2), (3), (4) පිළිතුරුවලින් නිවැරදි හෝ වඩාත් ගැළපෙන හෝ පිළිතුර තෝරා ගන්න.
- ඔබට සැපයෙන උත්තර පත්‍රයේ එක් එක් ප්‍රශ්නය සඳහා දී ඇති කව අතුරෙන්, ඔබ තෝරාගත් පිළිතුරෙහි අංකයට සැසඳෙන කවය තුළ (x) ලකුණ යොදන්න.
- එම පිළිතුරු පත්‍රයේ පිටුපස දී ඇති අනෙක් උපදෙස් ද පරෙස්සමෙන් කියවා, ඒවා පිළිපදින්න.

Note:
- Answer **all** questions.
- In each of the question s from **1** to **40**, pick one of the alternatives (1), (2), (3), (4) which **correct** or **most appropriate.**
- **Mark a cross** (x) **on the number corresponding to your choice in the answer sheet.**
- Further instructions are given on the back of the answer sheet. Follow them carefully

- 1-5 வரையான வினாக்களில் தடித்த எழுத்தில் உள்ள சொல்லின் **ஒத்த கருத்துள்ள சொல்லைத்** தெரிவு செய்க.
  අංක 1 සිට 5 තෙක් ප්‍රශ්නවල තද කළු අකුරරවලින් ඇති පදයට සමාන පදය තෝරන්න.
  In questions **1** to **5**, select the **synonyms** for the words in bold print.

01. திருகோணமலை இயற்கை **எழில்** நிறைந்த நகரமாகும்.
  1. அமைதி  2. வெளிச்சம்  3. இன்பம்  4. அழகு

02. இலங்கை மக்களின் பிரதான **உணவு** சோறாகும்.
  1. தானியம்  2. சமையல்  3. சாப்பாடு  4. ஏற்பாடு

03. “விழாவினை இளைஞர் **மன்றம்** ஏற்பாடு செய்தது”
  1. சங்கம்  2. அணி  3. படை  4. கடை

04. நிகழ்ச்சியில் முதல் அம்சமாக **கடவுள்** வழிபாடு இடம்பெற்றது.
  1. கோயில்  2. பள்ளிவாசல்  3. விகாரை  4. இறைவன்

05. சிறுத்தைக்கு **கோபம்** வந்தது.
  1. பெருமை  2. சினம்  3. சிரிப்பு  4. வீரம்

- 6-10 வரையான வினாக்களில் தடித்த எழுத்தில் உள்ள சொல்லின் **எதிர்க் கருத்துள்ள சொல்லைத்** தெரிவு செய்க.
  අංක 6 සිට 10 තෙක් ප්‍රශ්නවල තද කළු අකුරුවලින් ඇති පදයට විරුද්ධ පදය තෝරන්න.
  In questions **6** to **10**, select the **antonyms** for the words in bold print.

06. உங்களைச் சந்திப்பதில் **மகிழ்ச்சி** அடைகிறோம்.
  1. வெட்கம்  2. துக்கம்  3. ஏக்கம்  4. தாக்கம்

07. எனது **நண்பன்** இன்று வருவான்.
  1. பகைவன்  2. நண்பி  3. அண்ணா  4. அன்பன்

08. நான் **விரைவாக** வீட்டுக்குப் போக வேண்டும்.
1. வேகமாக 2. மெதுவாக 3. அவசரமாக 4. நன்றாக

09. யால வனம் ஒரு **பெரிய** தேசிய வனமாகும்.
1. பாரிய 2. அழகிய 3. சிறந்த 4. சிறிய

10. **மழை** காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டனர்.
1. குளிர் 2. வெயில் 3. சூடு 4. பனி

- 11-13 வரையான வினாக்களில் தடித்த எழுத்தில் உள்ள **பேச்சு வழக்குச் சொல்லுக்கான எழுத்து வழக்குச் சொல்லைத்** தெரிவு செய்க.
අංක 11 සිට 13 තෙක් ප්‍රශ්නවල තද කළු අකුරින් දැක්වෙන කථන බසින් ඇති පදයට ලිඛිත පදය තෝරන්න.
In questions **11** to **13**, select the words in **written from for the words in spoken form** given in bold print.

11. வலது பக்கம் **திரும்புங்க.**
1. திரும்புங்கோ 2. திரும்பிடுங்க 3. திரும்புங்கள் 4. திரும்பிங்க

12. இங்கே கையொப்பம் **வையுங்க.**
1. வையுங்கோ 2. வைங்க 3. வையுங்க 4. வையுங்கள்

13. தேங்காய் **ஒண்டு** அறுபது ரூபாய்
1. ஒவ்வொண்டு 2. ஒன்டு 3. ஒன்று 4. ஒன்னு

- 14-16 வரையான வினாக்களிலுள்ள **இடைவெளிகளை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான** சொல்லைத் தெரிவு செய்க.
අංක 14 සිට 16 තෙක් ප්‍රශ්නවල හිස්තැන් පිරවීම සඳහා වඩාත් ම සුදුසු පදය තෝරන්න.
In questions **14** to **16**, select the most **suitable words to fill in the blanks.**

14. நான் மெல்லக் கதைத்தேன். .................................. மெல்லக் கதைத்தோம்.
1. அவன் 2. அவர்கள் 3. நீ 4. நாங்கள்

15. அவள் பால் குடிக்கின்றாள். .................................. பால் குடிக்கின்றார்கள்.
1. அவர்கள் 2. அவன் 3. அது 4. அவைகள்

16. நான் பாட்டுப் பாடுகின்றேன். .................................. பாட்டுப் பாடுகின்றீர்கள்.
1. நீ 2. நீங்கள் 3. நாங்கள் 4. அவர்கள்

- 17-19 வரையான வினாக்களுக்குப் **பொருத்தமான முடிக்கும் சொல்லைத்** தெரிவு செய்க.
අංක 17 සිට 19 තෙක් ප්‍රශ්නවල සුදුසු අවසාන පදය තෝරන්න.
In questions **17** to **19**, select the suitable **ending** words.

17. நாங்கள் ஆசிரியரோடு .............................
1. சென்றீர்கள் 2. சென்றார்கள் 3. சென்றோம் 4. செல்கின்றீர்கள்

18. எலிகள் பயமில்லாமல் ஓடித் ................................
1. திரிகின்றன 2. திரிகின்றான் 3. திரிகின்றோம் 4. திரிவேன்

19. அவளுக்கு உண்மை ...................................
1. புரிந்திருக்கிறார்கள் 2. புரிகின்றன 3. புரிந்தது 4. புரிந்திருக்கின்றன.

- 20-22 வரையான வினாக்களிலுள்ள வாக்கியங்களின் இடைவெளிக்குப் **பொருத்தமான உருபைத்** தெரிவு செய்க.
අංක 20 සිට 22 තෙක් ප්‍රශ්නවල ඇති වාක්‍යවල හිස්තැනට **සුදුසු විභක්ති ප්‍රත්‍යය** තෝරන්න.
In questions **20** to **22**, select the **suitable suffixes** to fill in the blanks.

20. நண்பர் ................................. தொலைபேசியில் உரையாடினேன்.
1. ஆல் 2. இல் 3. ஓடு 4. உம்

21. மாணவர்கள் அதிதி ................................. மேடைக்கு அழைத்து வந்தனர்.
1. கு 2. இல் 3. ஓடு 4. ஐ

22. இந்தப் புத்தகம் ஆசிரியர் ................................. வழங்கப்பட்டது.
1. ஐ 2. உம் 3. ஆல் 4. இல்

- 23-25 வரையான வினாக்களில் ஆரம்பத்தில் தரப்பட்டுள்ள வாக்கியத்தை விடையாகப் பெறக்கூடிய **பொருத்தமான வினாவைத்** தெரிவு செய்க.
  අංක 23 සිට 25 තෙක් ප්‍රශ්නවල මුලින් දී ඇති වාක්‍යය පිළිතුර වශයෙන් ලබා ගැනීමට **සුදුසු ප්‍රශ්නය** තෝරන්න.
  In questions **23** to **25**, select the **suitable questions** to get the sentences given at the **beginning** as the answers.

23. அவர்கள் படகில் ஏறினார்கள்.
    1. அவர்கள எதில் ஏறினார்கள்?
    2. அவர்கள் எப்படி ஏறினார்கள்?
    3. அவர்கள் எப்போது ஏறினார்கள்?
    4. அவர்கள் எதற்காக ஏறினார்கள்?

24. எனது தாய் றாடு இலங்கை.
    1. உமது தாய் நாடு எப்படி?
    2. உமது தாய் நாடு எது?
    3. உமது தாய்நாடு எங்கு?
    4. உமது தாய் நாடு யார்?

25. பட்டம் மேலே பறந்தது.
    1. யார் மேலே பறந்தது?
    2. எவை மேலே பறந்தது?
    3. எது மேலே பறந்தது?
    4. எவர் மேலே பறந்தது?

- 26-28 வரையான வினாக்களில் உள்ள இடைவெளிகளை நிரப்புவதற்கு **மிகப் பொருத்தமான சொல்லைத்** தெரிவு செய்க.
  අංක 26 සිට 28 තෙක් ප්‍රශ්නවල හිස්තැන් සම්පූර්ණ කිරීමට **වඩාත් සුදුසු පදය** තෝරන්න.
  In questions **26** to **28**, select the **most suitable words** to fill in the blanks.

26. இலங்கை இயற்கை வளம் மிக்கது. ............................ சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர்.
    1. ஆனால்   2. அதனால்   3. அவ்வாறு   4. அது

27. அந்தப் புத்தகம் தான் எனக்கு விருப்பம். ........................... அதில் நிறைய கதைகள் உள்ளன.
    1. ஏனெனில்   2. எனவே   3. ஆனாலும்   4. அதனால்

28. மழை பெய்தது. ............................... நான் நனையவில்லை.
    1. ஆனாலும்   2. அதனால்   3. அது   4. அவ்வாறு

- 29 மற்றும் 30 ஆகிய வினாக்களில் இடம்பெறும் வாக்கியங்களை **அறிவித்தல், அறிவுறுத்தல், தகவல், கட்டளை** என்பவற்றுள் எதற்குரியது எனத் தெரிவு செய்க.
  29 හා 30 ප්‍රශ්නවල ඇතුළත් වාක්‍ය **නිවේදන, උපදෙස්, තොරතුරු, විධාන** යන ඒවා අතුරෙන් කවරකට අයත් දැයි තෝරන්න.
  For questions **29** and **30**, out of the categories **announcements, instructions, information and orders**, select to which category the sentences belong.

29. வலது பக்கமாகத் திரும்பவும்.
    1. அறிவித்தல்   2. அறிவுறுத்தல்   3. தகவல்   4. கட்டளை

30. தீபாவளி ஒற்றுமையை வளர்க்கின்றது.
    1. அறிவுறுத்தல்   2. தகவல்   3. கட்டளை   4. அறிவித்தல்

- 31 மற்றும் 32 ஆகிய வினாக்களில் **(அ) பிரிவில்** உள்ள பகுதியை முடிப்பதற்குப் பொருத்தமான சொல் **(ஆ) பிரிவில்** உள்ளது. சொற்களை ஒழுங்குமுறையில் கொண்டமைந்த விடைகளைத் தெரிவு செய்க.
  31 හා 32 ප්‍රශ්නවල (அ) යටතේ ඇති කොටසට ගැළපෙන අවසන් පදය (ஆ) කොටසේ ඇත. එය නිවැරදි ලෙස ගළපා ඇති වරණය තෝරන්න.
  For questions **31** and **32**, the appropriate ending word for the **pharases** in (அ) are given in (ஆ). Select the option that matches the words correctly.

31.

| **(அ)** | **(ஆ)** |
|---|---|
| 1. இளங்கன்று | அ. சுடுகாடு மட்டும். |
| 2. தொட்டில் பழக்கம் | ஆ. பால் குடிக்கும். |
| 3. ஆழம் அறியாமல் | இ. பயமறியாது. |
| 4. அழுத பிள்ளை | ஈ. காலை விடாதே. |

1. இ, அ, ஈ, ஆ   2. ஆ, ஈ, அ, இ   3. ஈ, இ, அ, ஆ   4. ஈ, இ, அ, ஆ

32. (அ) (ஆ)
1. கோழியின் இளையது — அ. பூனை
2. பாம்பின் இளையது — ஆ. நரி
3. சீறுவது — இ. குட்டி
4. ஊளையிடுவது — ஈ. குஞ்சு

1. ஈ, ஆ, இ, அ  2. ஈ, இ, அ, ஆ  3. அ, ஆ, இ, ஈ  4. ஈ, இ, ஆ, அ

• 33 மற்றும் 34 ஆகிய வினாக்கள் ஒவ்வொன்றிலும் முதலிற் கொடுக்கப்பட்டுள்ள (அ), (ஆ) என்னும் இரு வாக்கியங்களும் **பொருள் வேறுபடாதவாறு** தனி வாக்கியமாக இணைக்கப்பட்டுள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.
33 හා 34 ප්‍රශ්නවල මුලින් දී ඇති (அ), (ஆ) වාක්‍ය දෙක අර්ථය **වෙනස් නොවන සේ** තනි වාක්‍යයක් ලෙස නිවැරදිව සම්බන්ධ කර ඇති වාක්‍යය තෝරන්න.
In questions 33 and 34, select the sentence that combines the two sentences (அ) and (ஆ) correctly **without changing the meaning.**

33. அ. சாந்த சுற்றுலா சென்றான்.
ஆ. சரிதா சுற்றுலா சென்றாள்.
1. சாந்த, சரிதா சுற்றுலா சென்றான்.
2. சாந்தவுடன் சரிதா சுற்றுலா சென்றார்.
3. சாந்த, சரிதா சுற்றுலா சென்றாள்.
4. சாந்தவும் சரிதாவும் சுற்றுலா சென்றனர்.

34. அ. நான் புறாமலைக்குச் செல்கின்றேன்.
ஆ நீங்கள் புறாமலைக்குச் செல்கின்றீர்கள்.
1. நானும் நீங்களும் புறாமலைக்குச் சென்றேன்.
2. நானும் நீங்களும் புறாமலைக்குச் சென்றோம்.
3. நானும் நீங்களும் புறாமலைக்குச் செல்கின்றோம்.
4. நானும் நீங்களும் புறாமலைக்குச் செல்கின்றேன்.


• 35 மற்றும் 36 ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ள சிங்களச் சொற்களுக்குப் பொருத்தமான **தமிழ்ச் சொல்லைத்** தெரிவு செய்க.
35 හා 36 ප්‍රශ්නවල දී ඇති සිංහල වචනයට ගැළපෙන **දෙමළ වචනය** තෝරන්න.
**In questions 35 and 36, select the Tamil word that matches the Sinhala word.**

35. ගුවන්විදුලිය  1. வானிலை  2. வானலை  3. வானொலி  4. மின்சாரம்

36. ආරම්භය  1. ஆறறிவு  2. ஆரம்பம்  3. ஆராதனை  4. முடிவு

• பின்வரும் வரைபை அவதானித்து 37-40 வரையான வினாக்களுக்குச் **சரியான விடையைத்** தெரிவு செய்க.
පහත දී ඇත ප්‍රස්ථාරය අධ්‍යයනය කොට 37 සිට 40 තෙක් ප්‍රශ්නවලට **නිවැරදි පිළිතුර** තෝරන්න.
**In questions 37 to 40, study the graph and choice the correct answer from those given below.**

ஜனனி தரம் 10 இல் முதலாந் தவணைப் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் கீழேயுள்ள வரைபில் தரப்பட்டுள்ளன.




37. ஜனனி ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்ற பாடம் எது?
1. தமிழ்  2. சமயம்  3. விஞ்ஞானம்  4. ஆங்கிலம்

38. ஜனனி ஆகக் குறைந்த புள்ளிகளைப் பெற்ற பாடம் எது?
1. கணிதம்  2. ஆங்கிலம்  3. விஞ்ஞானம்  4. தமிழ்

39. நாற்பது புள்ளிகளுக்கு மேல் பெறப்பட்ட பாடங்கள் எத்தனை?
1.  2.  3.  4.

40. இருபத்தைந்து வீதமான புள்ளிகள் பெற்ற பாடம் எது?
1. தமிழ்  2. விஞ்ஞானம்  3. ஆங்கிலம்  4. கணிதம்

සියලුම හිමිකම් ඇවිරිණි/ முழுப் பதிப்புரிமையுடையது / All Rights reserved

මධ්‍යම පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மத்திய மாகாண கல்வித் திணைக்களம்
Department of Education Central Province

தரம் : 11 — க.பொ.த (சா/த) முன்னோடிப் பரீட்சை - 2018 — 65 T II

# இரண்டாம் மொழி தமிழ் II

- பகுதி I இலுள்ள **இரண்டு** வினாக்களுக்கும் பகுதி II இல் இருந்து **ஏதேனும் ஒரு வினாவுக்கும்** பகுதி III இலுள்ள **இரண்டு** வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- **I** කොටසෙහි ප්‍රශ්න **දෙකටත්, II** කොටසේ එක් **ප්‍රශ්නයකටත්, III** කොටසෙහි ප්‍රශ්න **දෙකටත්** වශයෙන් ප්‍රශ්න පහකට පමණක් පිළිතුරු සපයන්න.
- Answer only **five** questions including the **two** questions in Part I and selecting **one** question from Part II and **two** questions in Part III.

## பகுதி I

01. பின்வரும் தலைப்புகளில் **ஒன்றைத்** தெரிவுசெய்து தரப்பட்ட விடயங்களை உள்ளடக்கி ஏறத்தாழ **100** சொற்களில் அமையுமாறு கட்டுரை ஒன்று எழுதுக.
දෙන ලද තොරතුරුවලට අනුව පහත මාතෘකාවලින් **එකක්** පිළිබඳ වචන **100 ක** පමණ රචනයක් ලියන්න.
Write an essay in about **100 words** on any **one** of the following topics according to the given information.

அ. எனது நாடு
- (i) அமைவிடம்
- (ii) வசிப்போர் / வரலாற்று சிறப்பம்சங்கள்
- (iii) விளையும் பயிர்கள் / இயற்கை வளங்கள்
- (iv) சிறப்பம்சங்கள்

ஆ. பாடசாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழா
- (i) நிகழ்ந்த காலம்
- (ii) வருகை தந்த அதிதிகள்
- (iii) அரங்கேறிய நிகழ்ச்சிகள்
- (iv) அதிதிகளின் கருத்துக்கள் / விழா நிறைவு

இ. உடைந்த பேனையின் சுயசரிதை
- (i) பேனையின் தற்போதைய நிலை
- (ii) பேனை தயாரிப்பின் ஆரம்பம்
- (iii) பேனையின் பயன்பாடுகள்
- (iv) இன்றைய நிலை

ஈ. ஊடகத்தின் பயன்கள்
- (i) ஊடகம் என்றால் என்ன ?
- (ii) வகைகள்
- (iii) ஊடகத்தின் முக்கியத்துவம்
- (iv) கிடைக்கும் நன்மைகள்

உ. தீபாவளித் திருநாள்
- (i) அறிமுகம்
- (ii) நோக்கம்
- (iii) தீபாவளித் தினத்தின் நிகழ்வுகள்
- (iv) படிப்பினை

(20 புள்ளிகள்)

02. பின்வரும் படத்தை அடிப்படையாகக் கொண்டு **கருத்துள்ள வாக்கியங்கள் ஐந்து** எழுதுக. ஒரு வாக்கியத்தில் ஆகக் குறைந்தது நான்கு சொற்களேனும் இருத்தல் வேண்டும்.
පහත සඳහන් පින්තූරය පදනම් කර ගනිමින් **අර්ථවත් වාක්‍ය පහක්** ලියන්න. සෑම වාක්‍යයකම වචන හතරකට නොඅඩුව තිබිය යුතු ය.
Write **five meaningful sentences** based on the picture given below. Each sentence should contain at least four words.



(10 புள்ளிகள்)

## பகுதி II

- **3, 4**ஆம் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றுக்கு** மாத்திரம் விடை எழுதுக.
3 සහ 4 ප්‍රශ්නවලින් **එකකට** පමණක් පිළිතුරු ලියන්න.
Answer only **one** question from 3 and 4.

03. பின்வரும் பாடலை வாசித்து அதன்கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு **பூரணமான வாக்கியங்களில்** விடை எழுதுக.
පහත කවි පෙළ කියවා, අසා ඇති ප්‍රශ්නවලට **සම්පූර්ණ වාක්‍යවලින්** පිළිතුරු සපයන්න.
Read the following poem and answer the questions given below **in complete sentences.**

அப்பா என்னை அழைத்துச் சென்றார் அங்கு ஓர் இடம்
அங்கிருந்த குயிலும், மயிலும் ஆடித் திரிந்தன
பொல்லா நரியும், புனுகுப் பூனையும் எல்லாம் நின்றன
குட்டி மான்கள் ஒட்டகச் சிவிங்கி கூட இருந்தன.

குரங்கு என்னைப் பார்த்து குறு குறு என்றது
யானை ஒன்று காதைக் காதை ஆட்டி நின்றது
முதலை தலையைத் தூக்கிப் பார்த்து மூச்சு விட்டது
கரடி கூட உறுமிக் கொண்டே காலைத் தூக்கிற்று.

சிறுத்தை ஒன்று கோபத்தோடு சீறிப் பார்த்தது
அங்கு எங்கள் அருகிலேயே சிங்கம் நின்றது
கரடி சிங்கம் புலியைக் கண்டேன் கண்டும் பயமில்லை
சூரனைப் போல் நின்றிருந்தேன் துளியும் பயமில்லை

சென்ற அந்த இடம் உனக்குத் தெரியவில்லையா?
மிருகக்காட்சிச்சாலை தானே! வேறொன்றுமில்லை.

**- அழ.வள்ளியப்பா**

(1) அப்பா அழைத்துச் சென்ற இடத்தில் எத்தனை மிருகங்கள் இருந்தன?
(2) குறு குறு என்றது எது?
(3) காதை ஆட்டி நின்ற மிருகம் எது?
(4) இந்த இடத்தில் இருந்த மிருகங்களின் பெயர்களைக் கூறுக.
(5) அப்பா உம்மை அழைத்துச் சென்ற இடம் எது?

04. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து, அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு **பூரணமான வாக்கியத்தில்** விடை எழுதுக.
පහත දැක්වෙන ඡේදය කියවා, අසා ඇති ප්‍රශ්නවලට **සම්පූර්ණ වාක්‍යවලින්** පිළිතුරු ලියන්න.
Read the following passage and answer the questions given below in **complete sentences.**

இலங்கையிலுள்ள தேசிய வனங்களுள் யால வனமும் ஒன்று. அதிகளவு சுற்றுலாப் பயணிகள் இங்கு வந்து செல்கிறார்கள். இது பரப்பளவில் இரண்டாவது பெரிய தேசிய வனமாகும்.

யால தேசி வனம் இலங்கையின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. தலைநகரான கொழும்பிலிருந்து கிட்டத்தட்ட 300 கிலோமீற்றர் தொலைவில் உள்ளது. இது மொத்தமாக 979 சதுர கி.மீ பரப்பளவைக் கொண்டது. யால தேசிய வனம் 1900 ஆம் ஆண்டில் வனவிலங்கு சரணாலயமாக அறிவிக்கப்பட்டது. 1938 இல் தேசிய வனமாக அறிவிக்கப்பட்டது. இலங்கையின் புகழ் பெற்ற தேசிய வனமாக இது காணப்படுகிறது.

வனவிலங்குகளைப் பார்வையிடுவதற்குக் காலை 5.30 முதல் மாலை 6.30 வரை பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். வறட்சி காரணமாக ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 1 முதல் அக்டோபர் 15 வரை சுற்றுலாப் பயணிகளை அனுமதிப்பதில்லை.

(1) பரப்பளவில் இரண்டாவது பெரிய தேசிய வனமாகக் காணப்படுவது எது ?
(2) இதன் பரப்பளவு யாது ?
(3) இது எந்த ஆண்டில் வனவிலங்கு சரணாலயமாக அறிவிக்கப்பட்டது ?
(4) இதனைப் பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்படும் நேரத்தைக் குறிப்பிடுக.
(5) இதனைப் பார்வையிட அனுமதிக்கப்படாத காலத்தைக் குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

## பகுதி III

- **5, 6**ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.
  **5** සහ **6** ප්‍රශ්නවලට පිළිතුරු ලියන්න.
  Write answers to the questions **5 and 6**.

05. உமது பாடசாலையில் நடைபெற்ற கலைவிழா பற்றி உமது நண்பனுக்க ஒரு **கடிதம்** எழுதுக.

**அல்லது**

பாடசாலையில் நடைபெறவுள்ள கலை விழா ஒன்றுக்காக **அழைப்பிதழ்** ஒன்றைத் தயாரிக்க.
(10 புள்ளிகள் )

06. பின்வரும் சிங்கள வாக்கியங்களை தமிழில் மொழிபெயர்க்குக.
**පහත දැක්වෙන සිංහල වාක්‍ය දෙමළ භාෂාවට පරිවර්තනය කරන්න.**
Translate the following Sinhala sentences into Tamil.

1. ඔබ පාසලට පැමිණියේ කෙසේද?
2. මාගේ මව ගුරුවරයෙක්.
3. මම උදෑසන අවදි වෙමි.
4. අපේ මව්රට ශ්‍රී ලංකාවයි.
5. ඔබ කැමති පාඩම කුමක් ද?

**அல்லது**

காய்ச்சலுக்கு மருந்தெடுக்கச் சென்ற ஒரு நோயாளிக்கும் வைத்தியருக்கும் இடையே இடம்பெற்ற உரையாடல் ஒன்றை 50 சொற்களில் எழுதுக.
උණට බෙහෙතක් ලබාගැනීමට ගිය රෝගියෙකු හා වෛද්‍ය වරයෙකු අතර සිදු වූ සාකච්ඡාවක් දෙබසක ආකාරයෙන් වචන 50 පමණ ඇතුලත් වන සේ ලියන්න.
(10 புள்ளிகள்)